# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0180/2016

ஆணை எண்: 199/2016

நாள்: 05/12/2016

திரு. B. செந்தில்குமார்,
2வது வார்டு கவுன்சிலர்,
காட்டுப்பாளையம், மொடக்குறிச்சி அஞ்சல் – 638 104,
ஈரோடு மாவட்டம். – மனுதாரர்

1. செயல் அலுவலர்,
   மொடக்குறிச்சி பேரூராட்சி,
   மொடக்குறிச்சி
   ஈரோடு மாவட்டம்–638 104

2. துணைத்தலைவர்,
   மொடக்குறிச்சி பேரூராட்சி,
   மொடக்குறிச்சி – 638 104. – எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சியைச் சேர்ந்த திரு. B. செந்தில்குமார், என்பவரது 09–03–2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் 15.03.2016 அன்று பெறப்பட்டு 180/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு கீழ்க் - கண்டவாறு ஆணையிடப்படுகிறது:–

## ஆணை

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சியைச் சேர்ந்த திரு. B. செந்தில்குமார் அவர்களின் 09.03.2016 நாளிட்ட நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அனுப்பப்பட்ட முறையீட்டு மனுவில் மனுதாரர் கீழ்க்கண்டவாறான புகார்களை தெரிவித்துள்ளார்:–

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சியைச் சேர்ந்த சின்னம்மாள் கணவர் ஆறுமுகம் என்பவர் 2002-ஆம் ஆண்டு கேரளா மாநிலத்தில் இறந்து இறப்புச் சான்று பெறப்பட்டதாகவும் மேற்படி நபர் மீண்டும் இறந்ததாக மொடக்குறிச்சி பேரூராட்சியில் பதிவு செய்து சான்று பெற்றதாக முறையீட்டு மனுவில் மனுதாரர் புகார் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆறுமுகம் இறந்தது 2002-ம் ஆண்டு கேரள மாநிலம், திருச்சூர் மாவட்டம், வடக்கஞ்சேரி கிராமப்பஞ்சாயத்து, தலப்பிள்ளை என்ற ஊரில் 08/01/2002ல் இறந்துள்ளார் என்றும் அதன் பதிவு எண்.05/2002 தேதி 15.01.2002 எனவும் தற்போது அவர் மொடக்குறிச்சியில் இறந்ததாக இறப்பு பதிவிற்கு தேவையான குடும்ப அட்டை மற்றும் அரசு ஆவணங்கள் எவையும் இறப்பு சான்று பெறுவதற்கான விண்ணப்பத்துடன் பேரூராட்சி செயல் அலுவலர் பெறாமல் மன்ற துணைத் தலைவர் துணையுடன் பேரூராட்சி செயல் அலுவலர் பதிவு செய்து இறப்புச் சான்று வழங்கியுள்ளார் என்று மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இம்முறையீடு குறித்து இம் முறைமன்ற நடுவம் 17.03.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கை கோரப்பட்டது. பேரூராட்சி செயல் அலுவலரது ந.க.எண்:75/2016, நாள்:04.04.2016, 12.08.2016 மற்றும் 22.08.2016 ஆகிய நாளிட்ட அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டன. மேற்படி அறிக்கையில் மொடக்குறிச்சி பேரூராட்சியின் வரிவசூலர் திரு.சே.மணிவண்ணன் என்பவரின் தல ஆய்வு அறிக்கையில் திருமதி.சின்னம்மாள் என்பவருக்கு படிப்பறிவு இல்லை என்பதாலும், கட்டாயமாக இறப்புச் சான்று தேவை என்பதாலும் திரு.ஆறுமுகம் 08.01.2002 தேதியில் இறந்து கேரள மாநிலம், திருச்சூர் மாவட்டம், வடக்கஞ்சேரி கிராம, பஞ்சாயத்து தலப்பிள்ளை என்ற ஊரில் இறப்புச்சான்று பெற்றதாகவும், மேற்படி இறப்புச்சான்று தீ விபத்தில் எரிந்து விட்டதால் அறியாமையின் காரணமாக மொடக்குறிச்சி பேரூராட்சியில் தவறுதலாக 15.05.2015ம் தேதியில் இறந்து விட்டதாக பதிவு செய்து சான்று பெற்றுள்ளதாக வரி வசூலர் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணையின் போது திருமதி. சின்னம்மாள் என்பவர் 31.03.2016 ஆம் தேதியிட்ட உறுதி மொழி பத்திரம் சமர்ப்பித்துள்ளார் எனவும் அவ்வுறுதி மொழி பத்திரத்தில் தனக்கு படிப்பறிவு இல்லை என்பதாலும், கட்டாயமாக இறப்புச் சான்று தேவை என்பதாலும் திரு.ஆறுமுகம் 08.01.2002 தேதியில் வேலை நிமித்தம் காரணமாக கேரள மாநிலத்திற்கு சென்றிருந்த பொழுது இறந்து விட்டதை திருச்சூர் மாவட்டம், வடக்கஞ்சேரி கிராம பஞ்சாயத்து தலப்பிள்ளை என்ற ஊரில் இறந்ததாக பதிவு செய்து சான்று பெற்றதாகவும், தன் வீடு தீ விபத்தில் எரிந்து விட்டதால் கேரளாவில் பெறப்பட்ட இறப்புச் சான்று எரிந்து விட்டதாகவும் தனது அறியாமையின் காரணமாக மொடக்குறிச்சி பேரூராட்சியில் தவறுதலாக 15.05.2015ம் தேதியில் இறந்து விட்டதாக பதிவு செய்து சான்று பெற்று விட்டேன் எனவும், மேற்படி தவறுக்கு தானே முழுப்பொறுப்பு எனவும், திரு.ஆறுமுகம் என்பவரின் இறப்பு பதிவினை இரத்து செய்து கொள்ளும்படியும் முழுமன சம்மதத்துடன் எழுதி அரசு வழக்கறிஞரிடம் உறுதிமொழி ஆவணம் பெற்று திருமதி. சின்னம்மாள் சமர்ப்பித்துள்ளார் என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

2015ம் ஆண்டின் இறப்பு பதிவேட்டில் பதிவு எண்:45/2015/01 நாள்:03.06.2015ல் பதிவு செய்யப்பட்ட திரு.ஆறுமுகம் த/பெ. வீராசாமி என்பவர் 15.05.2015–ஆம் தேதியில் இறந்ததாக தவறுதலாக பதிவு செய்யப்பட்டதை 31.03.2016–ஆம் தேதியில் இரத்து செய்யப்பட்டது என்று மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் முறையீட்டு மனுவில் 2- வது எதிர் மனுதாரராக பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் சேர்க்கப்பட்டுள்ளது குறித்து செயல் அலுவலர் தனது 12.09.2016 நாளிட்ட விளக்க அறிக்கையில் ஆறுமுகம் என்பவருடைய இறப்புச் சான்றிதழ் பதிவிற்கு பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் பரிந்துரை செய்யவில்லை எனவும் பிறப்பு இறப்பு நடைமுறை நிகழ்வுகளில் அலுவல் ரீதியாக பேரூராட்சி மன்ற துணைத் தலைவருக்கு யாதொரு பங்களிப்பும் இல்லையென்பதையும் தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய சூழ்நிலையில் புகார் மனு, மனுதாரரின் வாக்குமூலம், செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அதனுடன் பெறப்பட்ட சான்றாவணங்களின் அடிப்படையில் ஆறுமுகம்

என்பவருடைய இறப்புச் சான்று இறந்தவருடைய மனைவி திருமதி. சின்னம்மாள் படிப்பறிவு இல்லாத காரணத்தினாலும் மற்றும் சின்னம்மாள் என்பவருடைய வீடு தீ விபத்தின் பொழுது ஆறுமுகம் என்பவருக்கு 08.01.2002 அன்று கேரள மாநிலத்தில் தலைபிள்ளை என்ற ஊரில் பெறப்பட்ட இறப்புச் சான்று எரிந்து விட்டதாலும் சின்னம்மாளின் அறியாமையின் காரணமாகவும் ஆறுமுகம் என்பவருக்கு இறப்புச் சான்றினை இரண்டாவது முறையாக பதிவு செய்து இறப்புச் சான்று பதிவு சான்று பெறப்பட்டுள்ளதாக கண்டறியப்படுகிறது.

ஆறுமுகம் என்பவருடைய இறப்புச் சான்று 045/2015/01 நாள்: 03.06.2015 மொடக்குறிச்சி பேரூராட்சி 31.3.2016வது தேதியில் ரத்து செய்யப்பட்டுள்ளதாக கண்டறியப்படுகிறது.

இறப்பு சான்றிதழ் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்ற விவரம் எங்கும் எவரும் குறிப்பிடவில்லை. இதை செயல் அலுவலர் சம்பந்தப்பட்டவர்களை நேரில் வரவழைத்து இது குறித்து அவர்களிடம் உறுதி செய்துக்கொள்ளவேண்டும். வேறு அலுவகங்களில் இருவேறு இறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டு பயன் அடைந்திருந்தால் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தெரிவித்து உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். மேற்கூறிய நிலையில் செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மிகக் கவனமாக செயல்படவேண்டும் என கடுமையாக எச்சரித்து இம்முறைமன்ற நடுவம் அவ்வாறே ஆணையிடுகிறது.

2016-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர், க்காக

பெறுநர்

1. திரு. B. செந்தில்குமார்.
   2வது வார்டு கவுன்சிலர்,
   காட்டுப்பாளையம், மொடக்குறிச்சி அஞ்சல் – 638 104.
   ஈரோடு மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
   மொடக்குறிச்சி பேரூராட்சி,
   ஈரோடு மாவட்டம்–638 104,
   மொடக்குறிச்சி.